1968 ஆகஸ்ட் 19]

Industrial unit at Kadampuliyur

* 29 *Q.*—Thiru S. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether there is any proposal to start an industry in the co-operative sector in Kadampuliyur in South Arcot district with a view to utilise the cashewnuts and its products which are available in plenty in that area?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. டி. மார்டின் : முந்திரிப் பருப்பின் தோட்டில் இருந்து ப்ளாஸ்டிக் உற்பத்தி செய்ய முடியும் என்று நமது முதல் அமைச்சர் அவர்கள் முன்பு கூறியிருக்கிறார்கள். எனவே, இது போன்ற தொழிற்சாலையை எங்காவது தமிழகத்தில் ஓரிடத்தில் நிறுவ முயற்சி செய்வார்களா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இன்றைய முதல் அமைச்சர் அதைத் தொடர்ந்து வலியுறுத்தாததில் இருந்தே அது சாத்தியம் அல்ல என்பதை அறிந்து கொண்டிருக்கலாம்.

கூட்டுறவுச் சங்க நெசவாளர்களுக்கு முன் பணம்

* 30 வினா.—**திரு. சி. கோவிந்தராசன் :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு சொசைட்டிகளில் வேலை செய்யும் நெசவாளர்களுக்கு அவர்களின் விசேஷ காலச் செலவுகளுக்காக அட்வான்ஸ் கொடுக்க அரசாங்கம் திட்டமிட்டு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. சி. கோவிந்தராசன் : இதர தொழில்களில் வேலை செய்கிற தொழிலாளர்களுக்குப் போனஸ் போன்ற மற்ற வசதிகள் கிடைக்கின்றன. ஆனால் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களுக்குத் திருமணம் போன்ற சமயங்களில்கூடக் கடன் பெறக்கூடிய வசதி இல்லை. கூட்டுறவு சொஸைடிகளின் மூலமாக கடனைப் பெறுவதற்காவது ஏற்பாடு செய்ய முடியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: கைத்தறிக் கூட்டுறவு நெசவாளர் சங்கங்களில் பணிபுரிகிற உறுப்பினர்கள் சலுகை பெற அட்வான்ஸ் பெறுவதற்கான வாய்ப்பு ஒரே ஒரு வழியில் தான் இருக்கிறது. சி.டி. பண்டு—ஸ்கீம் (Contributary Thrift Fund Scheme)

என்று 1—7—1962-ல் இருந்து துவக்கப்பட்டு நடக்கிறது. நூற்று இருபத்தொன்பது சங்க நெசவாளர்கள் அதில் இருக்கிறார்கள். மொத்தம் அதில் 9,400 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அதன்படி கூட்டுறவுச் சங்க நெசவாளர்கள் தங்கள் வருமானத்தில் ஒவ்வொரு ரூபாய்க்கும் 6 காசு தர வேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் 2 காசு தரும். மாநில அரசு நான்கு காசு தரும். இந்தப் 12 காசு என்ற அடிப்படையில் 30—6—1967 வரை